[திரு. ம. சின்னசாமி] [1993 மார்ச் 16

(6) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் *1987-88* ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் பொதுப் பணித் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இருபத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துறைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை.

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் *1981-82* ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் *1992-93* ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள் - அறிமுகம் செய்தல்.

சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்). *1993* ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"*1993* ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லையென்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11.20

6. வரவு-செலவுத் திட்டம், 1993-94, பொது விவாதம்-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம், தொடர்ச்சி.

நேற்று திரு. பலராமன் அவர்கள் பேசி முடிக்கிற நேரத்தில், இத்தோடு முடித்துத் கொள்ளுங்கள் என்று கூறி முடித்து இருந்தேன். இருந்தாலும் இன்னும் சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்று கேட்டு இருக்கிறார். அதனால் அனுமதி அளித்து இருக்கிறேன். 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ளவேண்டும். ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் 10, 10 நிமிடங்களில் முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. உ. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று விட்ட காலராவைத் தொடராமல் 'எழில்மிகு சென்னை 2000' என்று இரண்டு முறையும் இந்த வரவு-செலவு நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த ஓர் ஆண்டு காலத்தில் சென்னை மாநகருக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டு இருக்கிறது. என்ன வளர்ச்சி என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். சென்னை மக்களுடைய கஷ்ட நஷ்டங்கள் சிலவற்றை நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே நான் பேசி முடித்து விடுகிறேன். யாரும் குறுக்கிடாமல் இருந்தால் சரி.